DIN_DELHI_28-12-2022





# சாகித்திய அகாதெமி யுவ புரஸ்கார் விருது வழங்கும் விழா

நமது நிருபர்

**புது தில்லி, டிச. 27:** சாகித்திய அகாதெமியின் நிகழ் ஆண்டுக்கான யுவ புரஸ்கார் விருது வழங்கும் விழா தில்லியில் செவ்வாய்க்கிழமை மாலை நடைபெற்றது.

இலக்கிய உலகில் உயரிய விருதாக சாகித்திய அகாதெமி விருது கருதப்படுகிறது. இந்தியாவில் அங்கீகரிக்கப்பட்ட 24 மொழிகளில் வெளியாகும் சிறந்த இலக்கியப் படைப்புகளுக்கு இந்த விருது அளிக்கப்படுகிறது.

இலக்கிய படைப்பாளிகளை கௌரவிக்கும் வகையில், ஆண்டுதோறும் இளம் எழுத்தாளர்களுக்கு 'யுவ புரஸ்கார்' விருதை இந்திய பிராந்திய மொழிப் படைப்புகளுக்கு சாகித்திய அகாதெமி வழங்கி வருகிறது.




தில்லியில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சியில் பொள்ளாச்சியைச் சேர்ந்த இளம் எழுத்தாளர் ப.காளிமுத்துக்கு சாகித்திய யுவ புரஸ்கார் விருது வழங்கிய அகாதெமியின் துணைத் தலைவர் மாதவ் கௌசிக்.

அதன்படி, இந்த ஆண்டுக்கான (2022) யுவ புரஸ்கார் விருது கடந்த ஆகஸ்ட் மாதம் அறிவிக்கப்பட்டிருந்தது. இந்த நிலையில், திரிவேணி கலா சங்கம் கலாசார வளாகத்தில் நடைபெற்ற இந்த விருது வழங்கும் நிகழ்ச்சிக்கு சாகித்திய அகாதெமி தலைவர் சந்திரசேகர் கம்பார் தலைமை வகித்தார். அகாதெமியின் செயலர் கே.ஸ்ரீநிவாச ராவ் வரவேற்றார்.

அவர் பேசுகையில், 'சாகித்திய அகாதெமி அங்கீகரிக்கப்பட்ட மொழிகளில் உள்ள அனைத்து இளம் எழுத்தாளர்களையும் ஊக்குவிக்கும் பணிகளை மேற்கொண்டு வருகிறது.

அவற்றில் ஒன்றாக அங்கீகரிக்கப்பட்ட 24 மொழிகளில் யுவ புரஸ்கார் விருதை வழங்கி இளம் எழுத்தாளர்களை ஊக்குவித்து வருகிறது. மேலும், இளம் எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் வகையில் பயண நிதித் திட்டமும் சாகித்திய அகாதெமியால் அளிக்கப்படுகிறது' என்றார்.

சிறப்பு விருந்தினராக பிரபல ஹிந்தி எழுத்தாளர் மம்தா காலியா பங்கேற்று இளம் எழுத்தாளர்களுக்கு யுவ புரஸ்கார் விருதை வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில் தமிழ் மொழிப் பிரிவில் 'தனித்திருக்கும் அரளிகளின் மதியம்' எனும் கவிதை தொகுப்புக்காக தமிழகத்தின் பொள்ளாச்சி பகுதியைச் சேர்ந்த எழுத்தாளர் பி. காளிமுத்துவுக்கு யுவ புரஸ்கார் விருது வழங்கப்பட்டது.

இதில் தாமிரப் பட்டயம் மற்றும் ரூ.50 ஆயிரத்துக்கான காசோலை அடங்கும்.

இவர் தவிர, அஸ்ஸாமி, பெங்காலி, போடோ, ஹிந்தி, கன்னடம், கஷ்மீரி, மராத்தி, கொங்கணி, மராத்தி, மலையாளம், மணிப்புரி, நேபாளி, ஒடியா, தெலுங்கு, சம்ஸ்கிருதம், உருது உள்ளிட்ட 23 பிராந்திய மொழிகளின் எழுத்தாளர்களுக்கும் யுவ புரஸ்கார் விருது வழங்கப்பட்டது.

எழுத்தாளர்கள் பள்ளிப்பட்டு நாகராஜு (தெலுங்கு), ஸ்ருதி கனித்கர் (சம்ஸ்கிருதம்), அனகா ஜெ.கோலாத் (மலையாளம்), தாதாபீர் ஜைமன் (கன்னடம்), பகவந்த் அன்மோல் (ஹிந்தி) உள்ளிட்டோர் விருது பெற்றவர்களில் இடம் பெற்றுள்ளனர். நிகழ்ச்சி முடிவில் சாகித்திய அகாதெமியின் துணைத் தலைவர் மாதவ் கௌசிக் பேசினார்.